2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

115—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்

***6907—திரு. M. ராஜமுத்து:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், ஆத்தூர் சுகாதார மாவட்டத்திற்குட்பட்ட பனமரத்துப்பட்டி, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில், 1986 ஆம் ஆண்டு கட்டப்பட்ட புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம் ஒன்று பழுதடைந்து இருந்தது. அந்தக் கட்டடத்தின் பயன்பாட்டை அறிந்திருந்த காரணத்தினால், மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று, 2021–2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி, 15–வது நிதிக் குழுவின்மூலம் 60 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது கூரை அளவில் அக்கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. வெகு விரைவில் அக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து அவர்கள்.*

திரு. M. ராஜமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல 15-வது நிதிக் குழு நிதியின்மூலம் அந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அந்தக் கட்டடத்தை விரைவாகக் கட்டி முடித்து, விரைந்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட வீரபாண்டி ஊராட்சியில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும். அந்தக் கட்டடத்தினுள்ளே ஆடு, மாடுகள் வருவதனால், அக்கட்டடத்திற்கு சுற்றுச்சுவருடன்கூடிய புதிய கட்டடம் கட்டித் தருவாரா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனமரத்துப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டு வருகின்ற கட்டடம் மிக விரைவில் பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது. அதோடு, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதுபோல், அவர் தொகுதியில் மட்டும், கடந்த ஓராண்டில் மட்டுமே 2022 ஜூன் திங்கள் 22 ஆம் தேதியன்று, மல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.48 இலட்சம் செலவில் ஒரு கட்டடமும்; இளம்பிள்ளை ஆரம்ப சுகாதார நிலைய புற நோயாளிகள் பிரிவுக் கட்டடம் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டிலும்; அதேபோல், வேடுகாத்தான்பட்டி, ஆரம்ப சுகாதார நிலைய புற நோயாளிகள் பிரிவுக் கட்டடம் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டிலும்; முருங்கம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

அதோடுமட்டுமல்லாமல், மாரமங்கலப்பட்டியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு துணை சுகாதார நிலையம் கட்டும் பணியும்; பெருமாள்கவுண்டம்பட்டியில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு

2023 ஏப்ரல் 6]

துணை சுகாதார நிலையக் கட்டடமும்; வேடுகாத்தான்பட்டியில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் ஓர் உள் நோயாளிகள் மற்றும் பிரசவக்கூடக் கட்டடமும்; நயினாம்பட்டியில் ரூ.20 இலட்சம் செலவில் ஒரு நலவாழ்வு மையக் கட்டடமும்; இளம்பிள்ளையில் ரூ.50 இலட்சம் செலவில் ஒரு வட்டார பொதுச் சுகாதார நிலையக் கட்டடமும் ஆக, ரூபாய் ஒரு கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில் ஐந்து கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவைமட்டுமல்லாது, கல்பாறைப்பட்டி துணை சுகாதார நிலையத்திற்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும், நாட்டார்மங்கலம் துணை சுகாதார நிலையத்திற்கு ரூ.25 இலட்சம் செலவிலும் கட்டடம் கட்டும் பணிகள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன.

எனவே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பதைப்போல, கட்டி முடிக்கப்பட்ட, கட்டிக் கொண்டிருக்கிற, கட்டப்படவிருக்கின்ற கட்டடங்களின் பட்டியல்களைத் தந்திருக்கிறோம். ஒரு தொகுதியில் மட்டும் இவ்வளவு கட்டடங்கள் என்பது அசாத்தியமான சாதனை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகவே உணர்வார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து அவர்கள்.*

திரு. M. ராஜமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட அமானிகொண்டலாம்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு என்று தனியாகக் கட்டடம் இல்லை. அருகில் உள்ள நெய்காரப்பட்டி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தம்மநாயக்கன்பட்டி ஊராட்சி, நெய்க்காரப்பட்டி ஊராட்சி, அமானிகொண்டலாம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் கிட்டத்தட்ட 35,000 மக்கள் வசிக்கின்றார்கள். அமானிகொண்டலாம்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கான இடம் இருக்கிறது. அமானிகொண்டலாம்பட்டி ஊராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கட்டிக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்து, அந்தக் கட்டடத்தையும்*

கட்டிக் கொடுக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் நிதியாண்டில், நிதி ஆதாரத்திற்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று, அக்கட்டடத்தையும் கட்டித் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியத்திற்குட்பட்ட அ.உடையாப்பட்டி-கள்ளை, கீழவெளியூர், பாதிரிப்பட்டி, ஆர்.டி.மலை ஆகிய பகுதிகளிலுள்ள துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் மூடப்பட்டு, தற்போது அவையெல்லாம் ஒரு பஞ்சாயத்துக்குச் சொந்தமான இடங்களிலே, வசதியற்ற நிலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் மேலே கூறிய அந்த இடங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 8,713 துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அதில் 20 சதவீதத்திற்கும் மேற்பட்டவை வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்றாலும், அவற்றையெல்லாம் படிப்படியாக சொந்தக் கட்டடங்களில் இயக்குவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகிறார்கள். அந்த வகையில் எதிர்வரும் நிதியாண்டில், அவர் சொன்ன கட்டடங்களில், ஏதாவது ஒன்றிரண்டை முன்னுரிமை

2023 ஏப்ரல் 6]

அடிப்படையில் எடுத்து கட்டுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.

திரு. ப. அப்துல் சமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மணப்பாறை தொகுதியில் புத்தாநத்தம் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையம் 1973–ல், பேராசிரியர் திரு. அன்பழகனார் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத்தான் 100 சுற்று வட்டார கிராம மக்களும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவ மேல் சிகிச்சைக்காக 13 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மணப்பாறைக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. எனவே, புத்தாநத்தம் ஆரம்ப சுகாதார நிலையம், வட்டார மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித்தரப்படுமா, புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறையில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையே இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே, பல கட்டடங்களைத் திறந்து வைப்பதற்கு நானும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், அவருடைய தொகுதிக்குச் சென்று கட்டடங்களைத் திறந்து வைத்திருக்கின்றோம் என்றாலும்கூட, அவர் சொன்னதைப் போல, புத்தாநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டார மருத்துவமனையாக ஆக்குவதைக் காட்டிலும், அவர் சொன்ன கட்டடங்களை கூடுதலாகக் கட்டித் தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.

[2023 ஏப்ரல் 6

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.வி. குப்பம் தொகுதியில், கே.வி. குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்தை, வட்டார மருத்துவமனையாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றோம். இந்த அவையிலும் அதைப்பற்றி பேசியிருக்கின்றோம். அதைப்போல, குடியாத்தம் ஒன்றியத்தில், கூடாநகரம் பகுதியிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையம் நூற்றுக்கணக்கான நோயாளிகள் தினசரி வருகை புரிகின்ற ஆரம்ப சுகாதார நிலையமாக உள்ளதோடு, *பழுதடைந்துள்ள கட்டடமாக இருக்கின்றது; பழைய கட்டடமாக இருக்கின்றது. கொஞ்சம் கொஞ்சமாக நோயாளிகள் மேல் இடிந்து விழுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. அந்தக் கட்டடத்தை அகற்றி புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** கட்டடம் என்பதை பழுதடைந்துள்ள கட்டடம் என மாற்றிவிடுங்கள். மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, துணை சுகாதார நிலையங்களாக இருந்தாலும், ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தாலும், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தாலும், வட்டார மருத்துவமனைகளாக இருந்தாலும் தேவைக்கேற்ப இருக்கின்றன என்கின்ற வகையில், ஒன்றிய அரசு புள்ளிவிவரங்களை தெரிவிக்கின்றது. எனவே, ஒன்றையொன்று மேம்படுத்துவது தற்போது இயலாத காரியமாக இருந்து கொண்டிருக்கிறது என்றாலும்கூட, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று, 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளுக்கு கடிதம் தந்து இருக்கிறோம். அப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்கப்பெறும்போது, நிச்சயம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும். அதோடுமட்டுமல்லாது, அவர், புதிய கட்டடம் ஒன்றும் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். எதிர்வரும் ஆண்டில், பதினைந்தாவது நிதி ஆணையத்தின்கீழ், நிதி நிலையின்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 6]

இருப்புக்கு ஏற்ப முன்னுரிமை தந்து, அந்தக் கட்டடம் கட்டுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூர் ஆண்டவர் அரசு மருத்துவமனையை மேம்படுத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வந்து, அதைப் பார்வையிட்டார்கள். பதினைந்தாவது நிதி ஆணையத்தின்கீழ் அது செயல்படுத்தப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. அதற்கு எப்போது நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். திருக்கண்ணபுரம், திருப்பயத்தான்குடி மற்றும் கணபதிபுரம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களும் பழுதடைந்துள்ளன. அவற்றையும் புதிதாகக் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூர் ஆண்டவர் அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரை, அங்கு கட்டடம் கட்டும் பணிகளுக்கு இன்றைக்கு உத்தரவிடப்பட்டு, அதற்கான அரசாணைகள் எல்லாம் பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவில் அந்தப் பணிகள் தொடங்கப்படும். அதோடுமட்டுமல்லாமல், நாகப்பட்டினத்தில் 500 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனைக்கான கட்டடப் பணிகள் விரைந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நன்கு அறிவார்கள். வருகின்ற மே மாதம் 15, 16, 17 ஆகிய 3 நாட்களில் அல்லது இரண்டாவது வாரத்தில் அந்த மருத்துவமனை பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது. அப்படி பயன்பாட்டிற்கு வரும்போது, நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் பகுதி மக்களுக்கு 500 படுக்கை வசதிகளுடனான புதிய மருத்துவ சேவை மிகப் பெரிய அளவில்*

பலனளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களைக் கட்டுகின்ற பணிகள் முன்னுரிமை அடிப்படையில் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், ஆறுதேசம் பகுதியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் 1958-ல் கட்டப்பட்ட பழமைவாய்ந்த கட்டடம் ஆகும். ஏற்கெனவே அந்தக் கட்டடம் பொதுப் பணித் துறையால் முழுமையாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் அறுவை சிகிச்சை அரங்கம், வெளி நோயாளிகள் அரங்கம் மற்றும் உள் நோயாளிகள் அரங்கம் என அனைத்துக் கட்டடங்களும் கட்டப்பட வேண்டும். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கு வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை எழில் கொஞ்சும் ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலையத்தை நானும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நேரில் சென்று பார்த்தோம். அங்குள்ள பழுதடைந்த கட்டடங்கள் நிச்சயமாக மாற்றியமைக்கப்பட்டு, புனரமைத்து கட்டப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை உணர்ந்து, நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டே அதற்கான பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அந்தக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெறும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.